**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

CC.No. 24/2019

| | | |
|---|---|---|
| Deposition of Witness for PW | : | 2 |
| Name (திரு/திருமதி) | : | கோபிநாத் |
| Father's Name/ Husband's Name | : | சிகாமணி |
| Village & Taluk | : | தன்னலம் |
| Calling | : | கூலி |
| Age | : | 37 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.07.2025**

**எதிரி ஆஜர்,**

**முதல் விசாரணை**

1. இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன குமார் எனக்கு தெரியும். சுமார் 8 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் அம்மாவாசை அன்று மேல் மலையனூர் கோவிலுக்கு சென்று மாலை 04.00 மணியளவில் எனக்கு சொந்தமான இரு சக்கர வாகனத்தில் நானும் எனக்கு பின்னால் குமார் என்பவரும் அமர்ந்து பயணித்துக்கொண்டிருந்தபோது பட்டிக்கூட்ரோடு பெட்ரோல் பங்க் அருகே குறுக்கே வந்த இரு சக்கர வாகனம் எங்கள் இரு சக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டது. அதில் எனக்கு சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. என்னுடன் வந்த குமார் என்பவர் கீழே விழுந்ததில் அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. காயமடைந்த எங்களை செஞ்சி அரசு மருத்துவமனைக்கு 108 அவசர ஊர்தி மூலம் அழைத்து வந்தனர். அங்கிருந்து எங்களை மேல் சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கிருந்து குமார் என்பவரை மேல் சிகிச்சைக்காக சென்னைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர் சுமார் 10 நாட்கள் கழித்து சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். சம்பவத்தன்று எங்கள் மீது மோதிய இரு சக்கர வாகனத்தை ஓட்டியவர் ஆஜர் எதிரி தான். எனது இரு சக்கர வாகனத்தின் பதிவு எண் மற்றும் எங்கள் மீது மோதிய இரு சக்கர வாகனத்தின் பதிவு எண்ணும் எனக்கு தெரியாது. காவலர்கள் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. சம்பவம் எந்த தேதி நடந்தது என்று தெரியாது. சம்பவ இடம் தெரியும் ஆனால் அந்த இடத்தின் பெயர் தெரியாது. பட்டிகூட்ரோடு அருகே பெட்ரோல் பங்க் இல்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரியை சம்பவத்தன்று சாலை உள்ளே

இருந்து வெளியே வரும்போது பார்த்தேன். சம்பவத்திற்கு முன்னிட்டு அவரை நான் பார்க்கவில்லை. எதிரி நான் பார்த்தபோது சாலையில் இருந்து வெளியே பிரதான சாலைக்கு வந்து கொண்டிருந்தார். நான் வாகனத்தில் வேகமாக வந்தேன் என்றால் இல்லை. நான் சொல்வது போல் விபத்து நடைபெறவில்லை என்றாலும் நான் தான் வேகமாக வந்து எதிரி வாகனத்தின் மீது மோதிவிட்டேன் என்றாலும் சரியல்ல. எதிரியின் பெயர் எனக்கு தெரியாது என்றாலும், அவரது விவரங்கள் காவலர்கள் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றாலும் சரிதான். தற்போதும் எதிரியை காவலர்கள் தான் அடையாளம் காட்டினார்கள் என்றாலும், அதன் பேரில் தான் அவரை தெரியும் என்றாலும் சரிதான். நான் மருத்துவமனையில் இருந்தபோது காவலர்கள் என்னை விசாரித்தனர். இறந்த நபர் எப்போது இறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அப்போது நான் மருத்துவமனையில் இருந்தேன். நான் இழப்பீடு பெறுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.